## ஐ.நா மற்றும் உலக அமைப்புக்கள் -பகுதி - 2

United National Industrial Development Organisation (UNIDO) – 1966 ல் ஐக்கியநாடுகள் பொது சபையால், UN தலைமைச் செயலகத்துடன் செயல்படும் ஒரு தன்னாட்சி நிறுவனமாக உருவாக்கப்பட்டது. 1985 -ல் சிறப்பு அங்கமாக மாற்றப்பட்டது. தலைமையிடம் ஆஸ்திரியாவிலுள்ள வியன்னாவில் உள்ளது.

Universal Postal Union -UPU. 1875 ல் உருவாக்கப்பட்டது. இதனை உருவாக்குவதற்காக Universal Postal Congress, 1874 ஆம் ஆண்டு பெர்னே என்ற இடத்தில் நடைபெற்றது. முந்தைய பெயர் General Postal Union. 1948 ல் ஐக்கியநாடுகள் சபையின் சிறப்பு அங்கமாக மாறியது. தலைமையிடம் Berne, Switzerland.

World Intellectual Property Organisation (WIPO) – அறிவு சார் சொத்துக்களின் உரிமைகளுக்காக 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1974 ல் UN சிறப்பு அங்கமானது. WIPO உருவாகக் காரணமான இரண்டு முக்கியமான நிகழ்வுகள் Paris Convention for the Protection of Industrial Property – 1883, Berne Convention for the Protection of Literary and Artistic Works – 1886. தலைமையிடம் ஜெனீவா, சுவிட்சர்லாந்து.

World Meteorological Organisation (WMO) – உலக காலநிலை நிறுவனம். 1947 ல் துவங்க்கப்பட்டது. 1950 ல் நடைமுறைக்கு வந்தது. WMO வின் முதல் கூட்டம் பாரிஸ் நகரில் 1951 ஆம் ஆண்டு நடைபெற்றது. தலைமையிடம் ஜெனீவா, சுவிட்சர்லாந்து.

International Atomic Energy Agency (IAEA) – 1957 ல் அமைக்கப்பட்டது. அணு சக்தியை உலக அமைதிக்காக பயன்படுத்துவதே இதன் நோக்கம்.

IAEA ஆராய்ச்சி கூடம் ஆஸ்திரியாவிலுள்ள மொனோக்கா என்ற இடத்தில் உள்ளது.

International Centre for Theoretical Physics என்ற அமைப்பு IAEA வினால் நடத்தப்படுகிறது. 1964 ல் துவங்கப்பட்ட இது Trieste (டிரிஸ்டி) என்ற இடத்தில் அமைந்துள்ளது.

International Seabed Authority (ISA) – (உலக கடல்சார் நிறுவனம்) 1982 -ல் நடைபெற்ற கூடுகையின் அடிப்படையில் துவங்கப்பட்டது. 1996 முதல் செயல்பட்டு வருகிறது. தலைமையிடம் கிங்ஸ்டன் , ஜமைக்கா.

tnpscportal.in

International Tribunal for the Law of the Sea (ITLOS) – 1996 ல் ஹம்பர்க் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.

United Nations High Commissioner for Refugees (UNHCR) – உலகமெங்கும் உள்ள அகதிகளுக்கான நிறுவனம். இரண்டாம் உலகப்போரின் விளைவாக ஏற்பட்ட அகதிகளின் நலனுக்காக 1951 ஆம் ஆண்டு மூன்று ஆண்டுகள் கால அளவுடன் துவங்கப்பட்டது. தற்போது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை Renew செய்யப்படுகிறது. தலைமையிடம் ஜெனீவாவில் உள்ளது. 1955 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் இரண்டு முறை அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

UN Relief and Works Agency for Palestine Refugees (UNRWA) – பாலஸ்தீனிய அகதிகளுக்காக 1949 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

Commission on Human Rights (CHR) - UN சமூக பொருளாதார கவுன்சிலினால் (ECOSOC) 1946 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

High Commissioner for Human Rights என்ற பதவி 1993 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த பதவியின் காலம் 4 ஆண்டுகளாகும். இவர் UN பொதுச் செயலாளரால் பதவி நிர்ணயம் செய்யப்படுகிறார்.

United Nations International Drug Control Programme (UNDCP) – போதை பொருள்களை கட்டு படுத்தும் அமைப்பாக 1991 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள்

ஐக்கிய நாடுகள் சபை 6 பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களைக் கொண்டுள்ளது.

1.United Nations Institute for Training and Research (UNITAR) – 1963 ல் ஆரம்பிக்கப்பட்டது ஐக்கிய நாடுகள் சபையில் பணிபுரியும் பணியாளர்களின் பயிற்சிக்காக.

2.United Nations Institute for Disarmament Research (UNIDIR) – 1980, ஆயுதக் குறைப்புக்காக, தலைமையிடம் ஜெனீவா, சுவிட்சர்லாந்து.

3.United Nations International Research and Training Institute for the Advancement of women (INSTRAW) – பெண்கள் முன்னேற்றத்திற்காக, 1976 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தலைமையிடம் சான்டோ டொமிங்கோ, டொமினிக்கன் ரிப்ளிக்.

4.United nations Research Institute for Social Development (UNRISD) – 1963-ல் ஆரம்பிக்கப்பட்டது. தலைமை - ஜெனீவா, சுவிட்சர்லாந்து.

5.United Nations University (UNU) – 1973 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. ஜப்பானின் டோக்கியோ நகரில் உள்ளது.

6.University for Peace – Costa Rica – வில் 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

Organisation for Economic Cooperation and Development (OECD) -தலைமையிடம் பாரிஸ், பிரான்சு. 1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. முந்தைய பெயர் - Organisation for European Economic Cooperation (OEEC) -1948 ல் ஏற்படுத்தப்பட்டது. இந்தியா ஒரு உறுப்பினர் அல்ல.

OECD -ன் முக்கிய அமைப்புகள்

1.International Energy Agency – IEA

2.Nuclear Energy Agency – NEA

3.Centre for Educational Research and Innovation - CERI

TNPSCPortal.In